அரசுத் தேர்வுகள் இயக்ககம் – சென்னை– 6.
மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வு மார்ச் –2020.
பகுதி– I தமிழ் – விடைக்குறிப்புகள்.

**விடைத்தாள் மதிப்பிடும் போது கீழ்க்குறிப்பிட்டுள்ள வழிமுறைகளைத் தவறாது பின்பற்றுதல் வேண்டும்.**

1. நீலம் மற்றும் கருப்பு மையினால் எழுதப்பட்டுள்ள விடைகள் மட்டுமே மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

2. விடைகள் சொந்த நடையில் தெளிவாக அமைந்து தொடர் பிழை, சொற்பிழை, எழுத்துப்பிழை, ஒற்றுப்பிழை இலக்கணப்பிழை இன்றி இருப்பின் முழு மதிப்பெண் வழங்குதல் வேண்டும்.

3. எழுத்துப்பிழை , ஒற்றுப்பிழை, இலக்கணப்பிழை ஒவ்வொன்றிற்கும் கால் மதிப்பெண் வீதம் குறைத்து அவ்வாறு குறைக்கும் மதிப்பெண்கள் எக்காரணம் கொண்டும் வினாவிற்குரிய மதிப்பெண்ணில் நான்கில் ஒரு பங்கிற்கு மேல் மிகாமல் இருத்தல் வேண்டும்.

4. தவறான விடைகளைக் (X) குறியிட்டும் தொடர் பிழைகளை அடிக்கோடிட்டும் ஒற்றுப்பிழைகளைக் (^)குறியிட்டுக் காட்டியும் விதிப்படி அவற்றிற்குரிய மதிப்பெண்களைக் குறைத்தல் வேண்டும்.

5. மதிப்பெண் வழங்கப்படுகின்ற ஒவ்வொரு சரியான கருத்திற்கும் தனித்தனியே (✓) குறியிடுதல் வேண்டும்.

6. மிகையாக விடை இருப்பின் "மிகை" என்று குறிப்பிட்டு அடித்தல் வேண்டும்.

7. ஒரே விடை மீண்டும் எழுதப்பட்டிருப்பின் "மீண்டும்" என்று குறிப்பிட்டு அடித்தல் வேண்டும்.

8. கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுத வேண்டும். இல்லையெனில் மதிப்பெண் வழங்கப்படமாட்டது.

9. வினா எண் குறிப்பிடாத விடைகளுக்கு மதிப்பெண்கள் வழங்குதல் கூடாது.

## பகுதி I

மதிப்பெண்கள் :90

| வ. எண் | விடை | மதிப் பெண் | மொத்த மதிப்பெண் |
|---|---|---|---|
| I. | **அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** | | 14×1=14 |
| 1. | (ஆ) நிலவுப் பூ | 1 | |
| 2. | (ஈ) இசைக்கருவி | 1 | |
| 3. | (இ) தலைக் கோலி | 1 | |
| 4. | (ஆ) எட்டு நாடுகள் | 1 | |
| 5. | (அ) கிறித்தவமும் தமிழும் | 1 | |
| 6. | (அ) திருவருட்பா | 1 | |
| 7. | (இ) வினைத்தொகை | 1 | |
| 8. | (ஆ) உத்தம சோழன் | 1 | |
| 9. | (அ) சென்னையிலிருந்து நேற்று வந்தான் | 1 | |
| 10. | (இ) காவியம் | 1 | |
| 11. | (அ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் | 1 | |
| 12. | (இ) ஈறுபோதல், இனமிகல் | 1 | |
| 13. | (ஆ) குறியீடு | 1 | |
| 14. | (ஆ) இரண்டு | 1 | |
| | | | |
| | பகுதி –IIபிரிவு –I | | |
| | **எவையேனும் மூன்றனுக்கு விடை தருக** | | 3×2=6 |
| | (இரண்டு கருத்துகள் இருப்பின் முழுமதிப்பெண் வழங்கலாம்) | | |
| 15 | கவிஞர் சிற்பி வியந்து பாடத் தமிழின் துணை வேண்டுவன.<br>• கதிரவன் மறைதல்<br>• சிவந்த வானம்பூக்காடாய்க் காட்சியளித்தல்<br>• உழைப்பாளர்களின் துன்பம் அடைந்த சிவந்த கரங்கள்<br>• பருத்த தோள்களில் வியர்வைத் துளிகள் முத்துமுத்தாய் இருத்தல்.<br>இவற்றை வியந்து பாட உன்னை விட்டால் வேறு துணையுண்டோ. | 2 | |
| 16 | விலங்குகளும் பறவைகளும் நடுங்கிய விதமாக நக்கீரர் கூறுவன<br>• விலங்குகள் மேய்ச்சலை மறந்தன<br>• குரங்குகள் நடுங்கின<br>• பறவைகள் நிலத்தில் வீழ்ந்தன<br>• பசுக்கள் கன்றுகளைத் தவிர்த்தன. | 2 | |

| | | | |
|---|---|---|---|
| 17 | வசனம், கவிதை – வேறுபாடு<br>1. எதுகை, மோனைகளைச் சேர்க்காமல் அடியளவு பாராமல் அமைப்பது வசனம்.<br>2. யாப்பிலக்கண விதிகளுக்கு உட்பட்டு இயற்றப்படுவது கவிதை. | 1<br><br>1 | |
| 18 | வயலுக்குள் யானையைத் தனித்து விடுவதால் ஏற்படும் விளைவு<br>• யானையின் வாயில் புகுந்த நெல்லைவிட அதன் கால்களால் மிதிபட்டு அழியும் நெல்லின் அளவு அதிகமாகும். | 2 | |
| | பிரிவு – 2<br>**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**<br>(இரண்டு கருத்துகள் இருப்பின் முழுமதிப்பெண் வழங்கலாம்) | | 2×2=4 |
| 19 | புக்கில்– தற்காலிகத் தங்குமிடம்.<br>தன்மனை–திருமணத்திற்குப் பின் கணவன் மனைவி தனித்து வாழும் இடம். | 1<br><br>1 | |
| 20 | சென்னையை அலங்கரித்த ஆறுகள்<br>1. கொற்றலையாறு<br>2. கூவம்<br>3. அடையாறு<br>4. பாலாறு<br>(இரண்டு எழுதியிருப்பின் முழுமதிப்பெண் வழங்கலாம்) | 2 | |
| 21 | பின்னணி இசை, காட்சியமைப்புக்கு உயிரூட்டும் விதம்<br>• திரைப்படத்தின் உணர்வுகளை வெளிக்கொணர உதவும்<br>• சான்று – கதைநாயகி சன்னல் வழியாக வெறித்துப் பார்த்தல் – தெரு காட்டப்படாமல் மகிழுந்து புறப்பட்டுச் செல்லும் ஒலி இணைக்கப்படுதல்.<br>• அவளைப் பார்க்க வந்தவர், அவள் விருப்பத்திற்கு மாறாக அங்கிருந்து புறப்பட்டுச் செல்கிறார் என்ற கதை, அந்தப் பெண்ணின் முகபாவனை மூலமே சொல்லப்படுதல் | 1<br><br>1 | |

| | பிரிவு – 3<br>எவையேனும் ஏழனுக்கு விடை தருக. | | 7×2=14 |
|---|---|---|---|
| 22 | பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுதல்<br>அ) இப்பொழுது எனக்குப் புரிந்துவிட்டது. நீயும் புரிந்துகொள்.<br>ஆ)வீட்டிற்கு (அ)வீட்டின் அருகில் விளையாடிய குழந்தையை அப்பா எங்கு அழைத்துக் (இழுத்துக்) கொண்டு போனார். | 1<br><br>1 | |
| 23. | கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும்இருவேறு தொடர்களை அமைக்க<br>அ) அவன்முன்வந்து கூறினான்.<br>அவன்முன்வந்து கூறினான்.<br>ஆ) கண்ணன் தானேஎழுதுவதாகச் சொன்னான்.<br>கண்ணன்தானே எழுதுவதாகச் சொன்னான்.<br>(பொருத்தமான தொடர் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்) | 1<br><br>1 | |
| 24 | பொருள் வேறுபாடறிந்து தொடர் அமைக்க<br>• தின்மை – தீமை<br>• திண்மை – வலிமை<br>› பிறர் செய்யும் தின்மையைப் பொறுப்பதே மிகச் சிறந்த திண்மையாகும்.<br>(பொருத்தமான தொடர் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்) | 2 | |
| 25 | தொடரில் உள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக<br>அ) பனையோலையால்(பனை ஓலையால்) கூரை வேய்ந்திருந்தனர்<br>ஆ) வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் குருளையையும், யானைக்கன்றையும் கண்டேன். | 1<br><br>1 | |
| 26 | உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில்அமைத்திடுக<br>அ) தலைவன் (அ) தலைவி இல்லாத குடும்பம் அச்சாணி இல்லாத தேர் போலத்துன்பப்படும்.<br>ஆ) நானும் என் தங்கையும் நகமும் சதையும் போல இருக்கிறோம்.<br>(பொருத்தமான தொடர் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்) | 1<br>1 | |
| 27 | வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக<br>அ) நம் வாழ்க்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தைப் பொறுத்திருக்கிறது.<br>ஆ) புத்தகம் படிக்கும் பொழுது கூர்ந்த. கவனம் அறிவைப் பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படைத் தேவையாகும். | 1<br><br>1 | |

| | | | |
|---|---|---|---|
| 28 | ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.<br>அ) அமர்ந்தனன் = அமர் + த்(ந்) + த் +அன் +அன்<br><br>அமர் – பகுதி<br>த் (ந்) – த் சந்தி, ('ந்' ஆனது விகாரம்)<br>த் – இறந்த கால இடைநிலை<br>அன் – சாரியை<br>அன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.<br><br>ஆ) செய்த = செய் + த் + அ<br><br>செய் – பகுதி<br>த் – இறந்தகால இடைநிலை<br>அ – பெயரெச்ச விகுதி.<br><br>(சொல்லைப் பிரித்தால் ஒரு மதிப்பெண், உறுப்புகளுக்கு ஒரு மதிப்பெண்) | 1<br><br>1<br><br>1<br><br>1 | |
| 29 | ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.<br>அ) எத்திசை = எ + திசை<br>விதி: இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்<br><br>ஆ) செந்தமிழே = செம்மை + தமிழே<br>விதி :1. ஈறுபோதல்–செம் + தமிழே<br>விதி :2. முன்னின்ற மெய் திரிதல்<br>(சொல்லைப் பிரித்தால் ஒரு மதிப்பெண், விதியிருப்பின் 1 மதிப்பெண்) | 1<br>1<br><br>1<br><br>1 | |
| 30 | ஈரசைச் சீர்கள் இரண்டு அவை :<br>1. மாச்சீர் 2. விளச்சீர்<br>(அல்லது)<br>தேமா, புளிமா, கருவிளம், கூவிளம்.<br>(இவைகளை எழுதியிருப்பின் முழுமதிப்பெண் வழங்கலாம்) | 2 | |

| | | | |
|---|---|---|---|
| | பகுதி –III பிரிவு –I<br>(நான்கு மதிப்பெண் வினாக்களுக்கு நான்கு கருத்துகள் இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்) | | |
| | எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. | | 2×4=8 |
| 31 | " ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் "<br>இடம்– தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல்<br>பொருள்–கடலால் சூழப்பட்ட இந்த உலகத்தின் இருளை அகற்றும் சூரியன்.<br>விளக்கம் – சூரியன் உலகத்தின் புற இருளைப் போக்குகிறது. தமிழ், மக்களின் அகத்தில் உள்ள அறியாமை இருளைப் போக்குகிறது.<br>(குறிப்பு– இடம் – 1 மதிப்பெண் , பொருள்– 1மதிப்பெண், விளக்கம் – 2 மதிப்பெண்) | 1<br>1<br>2 | 4 |
| 32 | அதிசயமலரின் பூச்செடி முளைப்பது பற்றி , தமிழ்நதி கூறுவன<br>• பேரழிவிற்குப் பின் நினைவில் மட்டுமே மரங்கள் மீந்திருக்கின்றன<br>• பொட்டல் வெளியில் பிறந்த குழந்தையாய் ஓர் அதிசயமலர்<br>• இச்செடி ஆட்களற்ற பொழுதில் உலவிய யானையின் எச்சத்திலிருந்து முளைத்திருக்கலாம்<br>• எவரோ ஒருவரின் காலணியின் பின்புறம் விதையாய் ஒட்டிக் கிடந்து உயிர் தரித்திருக்கலாம் | 1<br>1<br>1<br>1 | 4 |
| 33 | அதியமானின் ஈகைப்பண்பு<br>• நறுமணம் கமழும் பெரிய மலைச்சாரலில் இருந்த அழகுமிக்க நெல்லி மரத்தின் கனி, உயிர் நிலை பெற்று வாழ உதவும் அமுதத்தின் தன்மையுடையது.<br>• அத்தகைய நெல்லிக்கனி, தனக்குக் கிடைக்கப்பெற்ற போது அதனை (தான் உண்ணாமல்) ஔவைக்கு வழங்கியவன் அதியமான்(அதிகன்) என்னும் வள்ளல்<br>• வலிமையும் சினமும் ஒளியும் மிக்க வேலினை உடையவன்<br>• கடல் போன்று ஒலிக்கும் படையினையும் உடையவன். | 1<br>1<br>1<br>1 | 4 |

| | | | |
|---|---|---|---|
| 34 | இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் நாட்டிய அரங்கத்திற்கான அமைப்பு<br>• சிற்ப நூலில் சொல்லப்பட்டவாறு சிறந்த நிலத்தை ஆடல் அரங்கிற்குத் தேர்ந்தெடுத்தனர்<br>• மலைகளிலே நீண்டு வளர்ந்த மூங்கில்களிலே ஒன்றுக்கொன்று இடையே ஒரு சாண் அளவு கணுக்களைக் கொண்ட மூங்கிலைக் கொண்டு வந்தனர்<br>• தம் கைப்பெருவிரலில் இருபத்து நான்கு அளவினைக் கொண்டதாக இம்மூங்கிலை வெட்டினர்.<br>• அரங்கம் அமைக்கும் கோலாகக் கொண்டு அதில் ஏழுகோல் அகலமும் எட்டுக்கோல் நீளமும் ஒருகோல் உயரமும் உடையதாக நாட்டிய அரங்கத்தை அமைத்தனர்.<br>• தூண்களின் நிழலானது, அவையிலும் நாடக அரங்கிலும் விழாதபடி நல்ல அழகான நிலைவிளக்குகளை நிறுத்தினர்.<br>• ஒருமுகத்திரை, பொருமுகத்திரை, கரந்துவரல்திரை மூன்றையும் சிறப்புடன் அமைத்தனர். | | 4 |
| | பிரிவு – 2எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக. | | 2×4=8 |
| 35 | கலை முழுமை<br>• இலக்கியத்தின் 'பயன்' பற்றித் தமிழ் இலக்கிய மரபில் அழுத்தமான கருத்து உண்டு.<br>• அறம், பொருள், இன்பமாகவோ அல்லது வேறு ஏதோ ஓர் உயர்ந்த குறிக்கோளாகவோ, இந்தப் பயன் இலக்கிய உருவாக்கத்தில் இடம் பெற வேண்டும்.<br>• பின்னால் வந்தவர்கள் இதனை இயந்திரப் போக்காகத் தனியாக – ஒட்டாமல் – கூறியுள்ளனர்.<br>• தொல்காப்பியம் மிகவும் தெளிவாக இலக்கியத்தின் நோக்கம் அல்லது அறிவியல் சார்ந்த கருத்துநிலைகள், கலை உருவாக்கத்தின்போதே சரிவர இணைந்திருக்க வேண்டும் என்பதனைச் சுட்டிக்காட்டியுள்ளது. | 1<br>1<br>1<br>1 | 4 |
| 36 | பேரிடர் மேலாண்மை வாரியம் / ஆணையம்<br>• நடுவண் அரசு 2005ஆம் ஆண்டு டிசம்பர் 23 அன்று தேசிய பேரிடர் மேலாண்மை வாரியத்தை அமைத்தது.<br>• புயல், வெள்ளம், நிலநடுக்கம், வறட்சி, சுனாமி,நிலச்சரிவு, தீ விபத்து, சூறாவளி, பனிப்புயல், வேதிவிபத்துகள் முதலானவை பேரிடர்கள்.<br>• பேரிடர் நிகழும்போது பல்வேறு அமைப்புகளை ஒருங்கிணைத்துச் செயலாற்ற இந்த வாரியம் உதவுகிறது.<br>• மாநிலம், மாவட்டம், ஊராட்சி, சிற்றூராட்சி என அனைத்து நிலைகளிலும் குழுக்கள் அமைத்துப் பேரிடர்க் காலங்களில் இவ்வாரியம் செயல்பட வழிவகை செய்துள்ளது. | 1<br>1<br>1<br>1 | 4 |

| | | | |
|---|---|---|---|
| 37 | சென்னை நகரின் போக்குவரத்து வளர்ச்சி<br>• நடைபாதைகளும் மாட்டுவண்டிப் பாதைகளும் ஆங்கிலேயரின் குடியிருப்புகளை முன்னிட்டுச் சாலைகளாக மாறின.<br>• அண்ணாசாலைக்கு (மவுண்ட்ரோடு) அடுத்ததாக மதராசப்பட்டினத்தின் மற்றொரு முக்கியமான சாலை பூவிருந்தவல்லி நெடுஞ்சாலை..<br>• 1856ல் தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம் இராயபுரத்தில் அமைக்கப்பட்டது. இராயபுரம் தொடர்வண்டி நிலையம் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து சென்னை மத்தியத் தொடர்வண்டி நிலையம், எழும்பூர் தொடர்வண்டி நிலையம் ஆகியவை உருவாயின. சென்னை நகர வீதிகளில் டிராம் வண்டிகள் இயக்கப்பட்டன.<br>• 19ஆம் நூற்றாண்டில் பெரும் வளர்ச்சியடைந்த சென்னைத் துறைமுகமும் உலக நாடுகளைத் தமிழகத்துடன் இணைக்கும் பன்னாட்டு விமான நிலையமும் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியவை. | 1<br>1<br>1<br>1 | 4 |
| 38 | மயிலை சீனி வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குரிய செய்திகள்<br>• மயிலை சீனி வேங்கடசாமி 16.12.1900ஆம் ஆண்டு சென்னை மயிலாப்பூரில் பிறந்தார்.<br>• தந்தையின் சித்த மருத்துவப் பின்புலமும் தமையனாரின் தமிழ்ப் பின்புலமும் சீனி வேங்கடசாமியை வரலாற்று ஆய்வாளராய் உருவாக்கியது.<br>• 25 ஆண்டுகள் தொடக்கப்பள்ளி ஆசிரியராகப் பணியாற்றினார். விபுலானந்த அடிகள், கா.சுப்பிரமணியர், திரு.வி.க., தெ.பொ.மீ., ச.த. சற்குணம் ஆகிய அறிஞர் பெருமக்களிடம் கொண்டிருந்த தொடர்பு காரணமாகப் பல்வேறு இதழ்களில் அவர் எழுதிய கட்டுரைகள் வெளியாயின.<br>• தமிழ்த்தேனீ என்றால் நம் மயிலை சீனி வேங்கடசாமி அவர்களைக் குறிக்கும். சமயம், மானுடவியல், தமிழக வரலாறு, தொல்பொருள் ஆய்வு, கலை வரலாறு, மொழியாய்வு எனப் பல்வேறு துறைகளில் நூல்களைப் படைத்தவர்.<br>• மலையாளம், கன்னடம், சமஸ்கிருதம், பாலி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பயிற்சி பெற்றிருந்தார். திருமணமே செய்துகொள்ளாமல் இல்லறத் துறவியாய் வாழ்ந்து தம் வாழ்வை முழுமையாய்த் தமிழியல் ஆய்வுக்கு ஒதுக்கியவர்.<br>• தமிழில்'தமிழர் வளர்த்த அழகுக்கலைகள்' குறித்து முழுமையான நூல் வெளியிட்டார். இந்நூல் தமிழக அரசின் முதற்பரிசு பெற்ற நூல்.<br>• ஓயாத தேடலினாலும் கடுமையான உழைப்பாலும் அரிய ஆய்வு முடிவுகளைக்கொணர்ந்த இம்மாமனிதருக்கு சென்னை கோகலே அரங்கில் மணிவிழா எடுத்து, 'ஆராய்ச்சிப் பேரறிஞர்' என்ற பட்டம் வழங்கப்பட்டது.<br>(நான்கு கருத்துகள் இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்) | | 4 |

| | பிரிவு – 3எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. | | 3×4=12 |
|---|---|---|---|
| 39 | ஏகதேச உருவக அணி<br>அணி இலக்கணம் (2 மதிப்பெண்)<br>தொடர்புடைய இரு பொருட்களுள் ஒன்றை மட்டும் உருவகம் செய்து மற்றொன்றை உருவகம் செய்யாமல் விடுவது ஏகதேச உருவக அணியாகும்.<br><br>சான்று: (1 மதிப்பெண்)<br>சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் என்னும்<br>ஏமப் புணையைச் சுடும்.<br><br>அணிப்பொருத்தம் :(1 மதிப்பெண்)<br>இக்குறளில் சுற்றத்தைத் தெப்பமாக உருவகப்படுத்தி, சினத்தை நெருப்பாக உருவகப்படுத்தாமல் விட்டதால் இது ஏகதேச உருவக அணி ஆகும். | 2<br><br>1<br><br>1 | 4 |
| | (அல்லது)<br>தொழில் உவமை அணி :<br>அணி இலக்கணம் :(2 மதிப்பெண்)<br>ஒரு பொருளின் தொழில் அல்லது செயல் காரணமாக அமையும் உவமை தொழில் உவமை எனப்படும்.<br><br>சான்று:(1 மதிப்பெண்)<br>"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க<br>இகல்வேந்தர்ச் சேர்ந்துஒழுகுவார்"<br><br>அணிப்பொருத்தம் :(1 மதிப்பெண்)<br>அரசனைச் சார்ந்து இருப்பவர், குளிர் காய்பவர்களைப் போலத் தீயிலிருந்து அகலாது, அணுகாது இருத்தல் வேண்டும். இதில் அகலுதல், அணுகுதல் போன்ற தொழில்கள் ஒப்புமைப்படுத்தப்பட்டுள்ளன. ஆகவே இது தொழில் உவமை அணி ஆயிற்று. | 2<br><br>1<br><br>1 | 4 |
| 40 | பாடாண் திணை: (2 மதிப்பெண்)<br>ஒருவருடைய புகழ், வலிமை, கொடை, அருள் போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது பாடாண் திணை.<br><br>சான்று :(1 மதிப்பெண்)<br>"காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே" எனத் தொடங்கும் பிசிராந்தையார் பாடிய புறநானூற்றுப் பாடல்.<br><br>திணைப் பொருத்தம்.(1 மதிப்பெண்)<br>இப்பாடல் பாண்டிய மன்னன் அறிவுடை நம்பியின் நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவதால் பாடாண் திணை ஆயிற்று<br>(குறிப்பு– அதியமானை ஔவையார் பாடியுள்ள "வாயிலோயே, வாயிலோயே"! என்ற பாடலை எழுதியிருப்பினும் மதிப்பெண் வழங்கலாம்) | 2<br><br>1<br><br>1 | 4 |

| | | | |
|---|---|---|---|
| 41 | தலைமகன் பாங்கனுக்கு உரைத்தது<br>• அழகும் இளமையும் வாய்ந்த உமணரின் மகள், வளையொலிக்கத் தெருவில் நடந்து சென்று உப்புக்கு மாற்றாக நெல்லைத் தந்து உப்பினைப் பெற்றுக் கொள்ளுமாறு கூவினாள்.<br>• அது கேட்டு நாய் இது வேற்றுக் குரலெனக் குரைத்தது. அதனால் அப்பெண்ணின் கண்கள் இரண்டும் அச்சத்தால் மீன்கள் தம்முள் போர் செய்வது போல் மருண்டன.<br>• அப்பெண்ணின் கண்களை நான் அங்கு கண்டேன். பழைய புனத்தைத் தீயிட்டு எரிக்கும் போது உண்டாகும் கரும்புகை போன்ற கருஞ்சேற்றில் அப்பெண்ணுடைய உப்புவண்டி சிக்கிக்கொண்டது.<br>• அவ்வண்டியைச் சேற்றிலிருந்து மீட்க எருது துன்பப்பட்டது போல அவள் கண்களில் நான் துன்புற்றேன். | 1<br>1<br>1<br>1 | 4 |
| 42 | பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.<br>அ) ஊழி பெயரினும் தாம் பெயரார்<br>விளக்கம்– உலகமே அழிந்தாலும் தன்நிலையிலிருந்து மாறாமல் இருப்பர்<br>ஏற்புடைய வாழ்க்கை நிகழ்வு: 3 மதிப்பெண் | 1<br>3 | 4 |
| | அல்லது | | |
| | ஆ) கூடி வாழ்ந்தால் கோடி நன்மை<br>பழமொழி விளக்கம்: 1 மதிப்பெண்<br>ஏற்புடைய வாழ்க்கை நிகழ்வு: 3 மதிப்பெண்<br>(வாழ்க்கை நிகழ்வின்றிக் கருத்து மட்டும் விளக்கியிருந்தால் 2 மதிப்பெண் வழங்கலாம்.) | 1<br>3 | 4 |
| 43 | கருத்துப்படத்தைப் புரிந்துகொண்டு பத்தியாக எழுதுக.<br><u>(சங்க இலக்கிய நூல்களை அதன் வைப்பு முறையில் பத்தியாக அமைத்திருந்தால் உரிய மதிப்பெண் வழங்கலாம்.)</u><br>சங்க இலக்கியங்கள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்ற இருபெரும் பிரிவுகள் கொண்டவை.<br>எட்டுத்தொகையில் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு அகநானூறு கலித்தொகை ஆகிய ஐந்தும் அகநூல்கள் ஆகும். புறநானூறும் பத்திற்றுப்பத்தும் புறநூல்கள். பரிபாடல் அகமும் புறமும் கலந்து பாடப்பட்டது.<br>பத்துப்பாட்டில் குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, பட்டினப்பாலை ஆகிய நான்கும் அகநூல்கள். மதுரைக்காஞ்சி, திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை ஆகிய ஆறு நூல்களும் புறநூல்கள். | 2<br>2 | 4 |

| | பகுதி –IV(ஆறு கருத்துகள் இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்) | | 3×6=18 |
|---|---|---|---|
| 44 | அ) “செய்ந்நன்றியறிதலே அறம் ” என்பதை வாயுறை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுதல்.<br>• தான் ஓர் உதவியும் செய்யாதிருந்தும் தனக்கு உதவி செய்தவருக்கு விண்ணுலகையும், மண்ணுலகையும் கைம்மாறாகக் கொடுத்தாலும் ஈடாகாது.<br>• உரிய காலத்தில் ஒருவர் செய்த உதவி சிறியதாயினும் அது உலகை விடப் பெரியதாகும்.<br>• பயனை ஆராயாமல் ஒருவர் நமக்குச் செய்த உதவியின் அன்புடைமையை ஆராய்ந்தால், அதன் நன்மை கடலைவிடப் பெரியதாகும்.<br>• ஒருவர் தினையளவு உதவியைச் செய்திருந்தாலும் அதன் பயன் தெரிந்தவர்கள், அதனையே பனையளவாகக் கொண்டு போற்றுவர்.<br>• ஒருவர் நமக்குச் செய்த நன்மையை மறப்பது நல்லதன்று, அவர் செய்த தீமையை அப்பொழுதே மறந்து விடுவது நல்லது.<br>• எந்த அறத்தை அழித்தவர்க்கும் தப்பிப் பிழைக்க வாய்ப்பிருக்கும். ஒருவர் செய்த உதவியை மறந்தவர்க்கு உய்வே இல்லை. | 1<br>1<br>1<br>1<br>1<br>1 | 6 |
| | (அல்லது)<br>ஆ) எச்.ஏ.கிருட்டிணனார் “கிறித்துவக் கம்பர்” என்பதை நிறுவுதல்<br>• கம்பர் திருத்தக்கத் தேவரைப் பின்பற்றி விருத்தப்பாவில் இராமாயணம் பாடினார். இவ்வகையில் எச்.ஏ.கிருட்டிணனார் கம்பரை அடியொற்றி விருத்தப்பாக்கள் வாயிலாக இயேசு பெருமானின் வாழ்வைக் காவியமாக்கினார்.<br>• கம்பராமாயணம் போன்றே, இரட்சணிய யாத்திரிகத்தைப் பெருங்காப்பியமாய் இயற்றியுள்ளார்.<br>• இந்நூலின் செய்யுள் நடையைப் பெரும்பாலும் கம்பராமாயணச் செய்யுள் நடையையும், அதன் அமைப்பையும் அதிகம் பின்பற்றி எழுதியுள்ளார்.<br>• கம்பர், வடமொழிக் காப்பியமான இராமாயணத்தைத் தமிழ் மரபுக்கு ஏற்பத் தமிழில் பாடிப் பெருமைப்படுத்தினார். எச்.ஏ.கிருட்டிணனார் ஆங்கில நூலைத் தழுவி, இயேசு பெருமானின் வாழ்வைத் தமிழில் “இரட்சணிய யாத்திரிகம்” எனப் படைத்தார்.<br>• கம்பரின் பாடல்களைப் போல கிருட்டிணனாரின் பாடல்களும் எளிதில் கற்கும் வகையில் பாடப்பட்டுள்ளன.<br>• பல இடங்களில் கிருட்டிணனாரின் கற்பனை கம்பரையே நமக்கு நினைவூட்டுகிறது.<br>எனவே இவரின் கவிதை நயம், கவிதை நடை ஆகியவற்றை அறிந்த தமிழ் இலக்கிய ஆர்வலர்கள் மனம் திறந்து இவரைக் “கிறித்துவக் கம்பர்” எனப் பாராட்டி மகிழ்ந்தனர். | 1<br>1<br>1<br>1<br>1<br>1 | 6 |

| | | | |
|---|---|---|---|
| 45 | அ) நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து<br>(கலந்துரையாடல் வடிவில் சரியான கருத்திருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)<br>வினாவிற்கேற்ற சுற்றுச்சூழல் தொடர்பான உரிய கருத்துகளைத் தொகுத்து எழுதியிருப்பின் மூன்று மதிப்பெண் வழங்கலாம். | 6 | 6 |
| | அல்லது<br>ஆ) சங்கால வரலாற்றை அறிந்து கொள்ள புகளூர் கல்வெட்டு துணைபுரியும் விதம்.<br>• சங்க காலத்தை அறிய இலக்கியங்கள் மட்டுமே துணைபுரியும் என்றிருந்த நிலையில் கல்வெட்டுகளும் துணையாக இருக்கின்றன.<br>• கரூரை அடுத்துள்ள புகளூரில் ஆறுநாட்டான் குன்றிலுள்ள குகைகள் ஒன்றில் நான்கு வரிகளாலான சேர மன்னர்களைக் குறிக்கக்கூடிய கல்வெட்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.<br>• நான்கு வரிகள் கொண்ட பிராமி எழுத்துகளில் முதல் வரி "யாற்றூர்" என்னும் இடத்தைச் சேர்ந்த சமணத்துறவியான செங்காயபன் வசிக்கும் இடம் இது என்று குறிப்பிடப்பட்டிருந்தது.<br>• இரண்டாவது வரியில் "கோ" என்ற முதல்சொல்லில் தொடங்கி அடுத்தடுத்து "பெருங்கடுங்கோன்", "இளங்கடுங்கோ", "இளங்கோ" என்ற பெயர்களும் இடம் பெற்றிருந்தன.<br>• சங்க நூல்களில் மட்டுமே இதுவரை காணப்பட்ட பண்டைய தமிழ் மன்னர்களின் பெயர்களைத் தமிழகத்தில் முதன்முறையாக ஒரு கல்வெட்டில் காணக் கிடைத்திருப்பது புகளூர்க் கல்வெட்டில் தான்.<br>• இது கருவூரிலிருந்து ஆட்சி செய்த சேரல் இரும்பொறை மன்னர்கள் பொறித்ததாகக் குறிக்கப்படுகிறது. பதிற்றுப்பத்திலும் ஏனைய சில சங்க நூல்களிலும் பாடப்பெற்ற பழந்தமிழ் மன்னர்களான இவர்களைப் பற்றிக் குறிப்பிடும் இக்கல்வெட்டு ஏறத்தாழ இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது என அறியப்படுகிறது. | 1<br>1<br>1<br>1<br>1<br>1 | 6 |
| 46 | (அ) சாலை விபத்தில்லா தமிழ்நாடு – இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன<br>வாழ்வை முழுமையாக்குவது பயணம் – சாலை விதிகளை அறிவதும் ஒரு வகைக் கல்வியே – சாலைப் போக்குவரத்தில் இரண்டாவது பெரிய நாடு – மாணவர்கள் விபத்தைத் தடுக்கும் விழிப்புணர்வு பெறுதல் – பெரும் கேடும் இழப்பை உணர்தலும் – சாலை விபத்தில்லா தமிழகம்.<br>(ஏற்புடைய செய்திகளைச் சொந்த நடையில் எழுதியிருப்பின் உரிய மதிப்பெண் வழங்கலாம்.) | 6 | 6 |

| | | | |
|---|---|---|---|
| | அல்லது<br>ஆ) "நடிகர் திலகம்" – என்ற பட்டம் சிவாஜிக்குப் பொருத்தமானதே என நிறுவுதல்<br>• ஊழித்தாண்டவமாடும் ருத்ரன், கவச குண்டலம் கொடுத்த கர்ணன், காளமேகத்தில் கவிதை ததும்பச் செய்த கவிகுலகுரு காளிதாசன்.<br>• அமிழ்தத் தமிழ்மொழியின் உன்னதக் கவியான பாரதி, தாய்த்தமிழ் மண்ணின் வீரத்தையும் கம்பீரத்தையும் கொட்டி முழக்கிய வீரபாண்டிய கட்டபொம்மன், சோழ குலோத்துங்கச் சூரியனான ராஜராஜசோழன் என சிவாஜி கணேசன் ஏற்ற கதாபாத்திரங்கள் அனைத்தினாலும் மக்களின் மன அடுக்குகளில் நீங்கா இடம் பிடித்தவர்.<br>• சிவாஜி கணேசனின் புருவங்களையும், கண்களையும் முக அபிநயங்களையும், உதடுகளையும், கைவிரல்களையும் தாள, லய அபிநயங்களையும் சலனங்களையும் கண்டவர் வியப்பது கண்கூடு.<br>• சத்ரபதி சிவாஜி, நாடகத்தில் நடித்ததால் பெற்ற பெயர் – சிவாஜி, 'பராசக்தியின்' வெற்றி அவரைத் திரைப்படத் துறையின் 'உச்சாணிக் கொம்பில்' மலரச்செய்து அழகு பார்த்தது.<br>• 'வீரபாண்டிய கட்டபொம்மன்' என்ற திரைப்படம் சிவாஜி கணேசனை உலகப் புகழ் பெற்ற நடிகனாக மாற்றியது.<br>• நீ ஏர் பிடித்தாயா? களை வெட்டினாயா? கஞ்சிக்கலயம் சுமந்தாயா? அங்கு கொஞ்சி விளையாடும் எங்கள் குலப் பெண்களுக்கு மஞ்சள் அரைத்துக் கொடுத்தாயா? நீ என்ன எனக்கு மாமனா? மச்சானா? மானங்கெட்டவனே.<br>• தென்னிந்திய நடிப்புச் சக்கரவர்த்தி, தமிழ்நாட்டின் நாட்டியப் பெருமையின் புகழ் கொடி, நடிகர் திலகம்.<br>• ஏற்ற பாத்திரமாகவே மாறி, நடிப்புக்கு இலக்கணம் வகுத்த சிவாஜிக்கு 'நடிகர் திலகம்' என்ற பட்டம் பொருத்தமானதே. | 6 | 6 |
| 47 | பகுதி–V – **அடிபிறழாமல் செய்யுள் வடிவில் தருக.** | | 4+2 = 6 |
| | **கம்பராமாயணம்**<br>அ) 'துன்பு உளதுஎனின் அன்றோ<br>சுகம் உளது? அது அன்றிப்<br>பின்பு உளது; இடை மன்னும்<br>பிரிவு உளது என உன்னேல்;<br>முன்பு உளெம் ஒரு நால்வேம்<br>முடிவு உளது என உன்னா<br>அன்பு உள, இனி, நாம் ஓர்<br>ஐவர்கள் உளர் ஆனோம். | 4 | 4 |
| | ஆ) திருக்குறள்<br>சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்<br>சொல்லிய வண்ணம் செயல். | 2 | 2 |